நெஞ்சே நீ போற்றிடு

நெஞ்சே நீ போற்றிடு
நேசமுள்ள ஆண்டவரை (2)

1)
விண்ணும் மண்ணும் விழைந்தது அவரால்
காற்றும் கடலும் வந்தது அவரால் (2)
வீசும் தென்றலும் பொழிந்திடும் மழையும்
புலர்ந்திடும்யாவும் புகழ்மிகு அவரால்
நம்பிக்கைபிரழா ஆண்டவர் அவரே
நம்பிக்கைபிரழா ஆண்டவர் அவரே

(நெஞ்சே நீ)

2)
ஒடுக்கப் பட்டோர்கள் உயர்வினைக் காண்பர்
பசித்திருப்போர்கள் வாழ்வினைப் பெறுவர் (2)
சிறையில் இருப்பவர் விடுதலை அடைவர்
பார்வையற்றோர்கள் ஒளி பெறுவர்
வாழ்ந்திடும் இறைவனின் கருணையினால்
வாழ்ந்திடும் இறைவனின் கருணையினால்

(நெஞ்சே நீ)